From-39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.

C.C.No. 165 /2021

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Kasinathadurai | Father/Husband Name | : Gurusami |
| Caste | : | Calling | : Advocate |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.21. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மதுரை திருமால்நகரில் வசித்து வருகிறேன். வழக்கறிஞராக தொழல் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். கடந்த 01.07.21ம் தேதி பகல் 2 அல்லது 3 மணியளவில் எங்கள் வீட்டின் எல்லா கதவுகளையும் பூட்டி அருப்புக்கோட்டை அருகிலுள்ள எனது மாமனார் ஊரான தும்முசின்னம்பட்டி என்ற ஊருக்கு சென்றிருந்தோம். 03.07.21ம் தேதி சனிக்கிழமை இரவு சுமார் 8 மணியளவில் நாங்கள் எங்கள் வீட்டிற்கு வந்து முன் பக்க கதவை திறந்தபோது திறக்கமுடியவில்லை, உள்பக்கமாக அது தாழிட்டிருந்தது. பின்னா பின்பக்கமாக சென்று பார்த்தபோது கிரில்கேட்டு தனியாக கழட்டி வைக்கப்பட்டு கதவுகள் உடைக்கப்பட்டிருந்தது. உள்ளே சென்று பார்த்தபோது அலமாரிகள் மற்றும் பீரோ உடைக்கப்பட்டு பொருட்கள் சிதறிக்கிடந்தது. உடனே நாங்கள் 100-க்கு போன் செய்து புகார் சொல்லிவிட்டு பொருட்களை சரிபார்த்தபோது 1) ஒன்றரை பவுன் எடையுள்ள தங்க கைசெயின் ஒன்று, 2) ஒரு பவுன் எடையுள்ள குழந்தைகள் அணியும் இரண்டு கைசெயின், 3) கால் பவுன் எடையுள்ள மோதிரம் 4, 4) வெள்ளி டம்ளர் 2, 5) வெள்ளி குத்துவிளக்குகள் 2 அல்லது 3, (சரியாக நினைவில் இல்லை) 6) வெள்ளி பரிசுபொருட்கள் 750 கிராம் எடை உள்ளது, 7) பட்டுப்புடவைகள் 2, 8) ரோலக்ஸ் வாட்ச் ஒன்று, 9) ரொக்கம் ரூ. 3 ஆயிரம் முதலியவைகள் திருடுபோயிருந்தது. பின்னர் போலீசில் புகார் செய்து போலீசார் வந்து விசாரித்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். 09.08.21ம் தேதி மாலை சுமார் 6.30 மணியளவில்

காவல் நிலையத்திலிருந்து வந்த தகவலின்படி காவல் நிலையம் சென்று ஆஜா் எதிரிகளை போலீசாா் அடையளாம் காட்டி எதிரிகள் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின்படி உருக்கிய தங்க கட்டியான நாளரை பவுன் எடையுள்ள தங்கத்தை காட்டினாா்கள். பின்னா் 01.09.21ம் தேதி நீதிமன்றத்தல் மனுச்செய்து பெற்றுச்சென்றேன். என்னுடைய மற்ற பொருட்களை ரொக்கப்பணம் ரூ.3 ஆயிரத்தை எதிரிகள் செலவு செய்துவிட்டதாகவும், மற்ற பொருட்களை எதிரிகள் தொலைந்துவிட்டதாக கூறியதாக சொன்னாா்கள். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்திலுள்ள தங்க கட்டியைத்தான் நீதிமன்றத்தில் மனு செய்து பெற்றுச்சென்றேன். அதன் எடை 35.340 கிராம். அந்த புகைப்படம் சா.பொ.1, சி.டி. சா.பொ.2 ஆகும். போலீசாா் என்னை விசாரித்தனா்.

குறுக்கு விசாரணை:

என் வீடு சேதமடைந்தது எத்தனை மணிக்கு யாரால் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசாா் அழைத்ததன்பேரில்தான் நான் எதிரிகளை அடையாளம் காட்ட காவல் நிலையம் சென்றேன். திருடிய நகைகளை உருக்கி தங்க கட்டிகளாக மாற்றிய விவரம் போலீசாா் சொல்லித்தான் தெரியும் என்றால் சரிதான். என்னுடைய பொருளைத்தான் உருக்கி தங்க கட்டி என்னுடைய நகைகள் என்று நேரடியாக தெரியாது, போலீசாா் சொல்லித்தான் தெரியும். இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் நேரடியாக சம்மந்தமில்லை என்றால் சரியல்ல. எதிரிகள் ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்ததை நான் பாா்க்கவில்லை என்றால் சரிதான். திருமால் நகரில் நிறைய வி.ஐ.பி.கள், வழக்கறிஞா்கள் உள்ளனா் என்றால் சரிதான். அந்த பகுதியில் சி.சி.டி.வி. உள்ளது என்றால் சரிதான். என் வீட்டில் உள்ளது என்றால் இல்லை. போலிசாா் வந்தவுடன் என்னுடைய வீட்டில் கைரேகை ஆகியவற்றை சோதிதத்தாா்களா என்றால் சோதித்ததா்கள். அதில் முன்னால் குற்றவாளிகள் கைரேகை பொருந்தியிருக்கிறது என்று என்னிடம் சொன்னாா்களா என்றால் கைரேகை எடுத்தாா்கள் வேறு ஒன்றும் சொல்லவில்லை. இந்த சம்பவம் 1.07.21க்கும் 03.07.21க்கும் இடைப்பட்ட காலத்தில்தான் நடந்திருக்கும் என்றால் சரிதான். அந்த பகுதியில் வழக்கறிஞா்கள் நிறையபோ் வருவாா்கள் அதில் யாரோ செய்ததை இந்த எதிரிகள் செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

From-39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 165 /2021

Deposition of witness for: PW - 2

| | | | |
|---|---|---|---|
| Name | : Loganathan | Father/Husband Name | : Ramaiah |
| Caste | : | Calling | : Advocate |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.21. | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் மதுரை திருமோகூரில் வசித்து வருகிறேன். வழக்கறிஞராக தொழில் செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். 04.07.21ம் தேதி அ.சா.1-ன் வீட்டின் அருகே வைத்து போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம்வரைந்து விசாரணை செய்து சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நானும் கருணாகரன் என்பவரும் கையெழுத்து செய்தோம். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

அ.சா.1 என் நண்பர் என்ற முறையில் நான் பார்வை மகஜரில் அவருக்கு ஆதரவாக கையெழுத்து செய்தேன் என்றால் சரியல்ல, அவர்கள் படம் வரைந்து விவரம் கேட்டதற்காக கையெழுத்து செய்தேன்.

From-39

# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 165 /2021

Deposition of witness for: PW - 3

| | | | |
|---|---|---|---|
| Name | : Vignesh | Father/Husband Name | : Selvam |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 09.08.21ம் தேதி காலை 10.30 முதல் 11 மணியளவில் நானும் என் அண்ணன் ராஜா என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது காளிகாப்பான் விலக்கு அருகே போலீசார் 1 மற்றும் 2 வது எதிரிகளை பிடித்து வைத்திருந்தார்கள். அப்பொழுது போலீசார் என்னிடம் அந்த இரண்டு நபர்களையும் சந்தேகத்தின்பேரில் பிடித்திருப்பதாகவும், சாட்சியாக வருமாறு அழைத்ததன்பேரில் முதல் 2 எதிரிகளுடன் போலீசார்களும் நாங்கள் இருவரும் சென்றோம். வௌவால்தோட்டத்தில் உள்ள மீனாட்சி நகரிலுள்ள எதிரியின் வீட்டில் வைத்து எதிரிகள் தங்க கட்டியை போலீசாரிடம் எடுத்து கொடுத்தார்கள். அதில் 3 தங்க கட்டிகள் இருந்தது. பின்னர் காவல் நிலையம் சென்று போலீசார் எடை போட்டு பார்த்து 2 பவுன், 14 பவுன் மற்றும் 4 1/2 பவுன் எடையுடையதாக போலீசார் கூறினார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியிலுள்ள முதலாவது கையெழுத்து என்னுடையதுதான். ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள அனுமதிக்கப்பட்டபகுதி அ.சா.ஆ.3, அத்தாட்சி அ.சா.ஆ.4 ஆகும். பிறகு போலீசார் மற்றொரு நபரை பற்றி எதிரிகள் கூறுவதாகவும் அவரையும் விசாரிக்கவேண்டும் சொல்லி ஜெய்ஹிந்புரம் அழைத்துச்சென்றார்கள். அங்கு 3ம் எதிரி அவரது வீட்டிலிருந்து ஆஜர் செய்த 5 பவுன் எடையுள்ள செயினை எங்கள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பறிறனார்கள். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் விவசாய அடையாள அட்டை வைத்துள்ளேனா என்றால் இல்லை. நான் இதே நீதிமன்றத்தில் வேறு வழக்குகளில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் இல்லை. நான் ஒத்தக்கடை காவல் ஆய்வாளர் கேட்டுக்கொண்டதன்படி நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒத்தக்கடை எஸ்.எஸ்.மஹால் அருகிலுள்ள சுந்தரி என்பவரை தெரியுமா என்றால் தெரியாது. சுந்தரி என்பவர் 1 மற்றும் 2வது எதிரிகளுக்கு இரண்டரை லட்சம் ரூபாய் பணம் தரவேண்டி உள்ளது என்றாலும் அதனை கேட்க சென்ற மேற்படி எதிரிகள்மீது சுந்தரி ஒத்தக்கடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் சுந்தரியே யார் என்று தெரியாது. எதிரிகள் சுந்தரி என்பவர் வீட்டில்தான் வாடகைக்கு குடியிருக்கிறார்கள் என்றால் தெரியாது. சுந்தரியின் தூண்டதலினால்தான் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சுந்தரியை எனக்கு தெரியாது. ஜெய்ஹிந்த்புரத்தில் 3-வது எதிரியின் வீடு மெயின்ரோட்டில் உள்ளதா உள்பகுதியில் உள்ளதா என்றால் உள்பகுதிக்குதான் அழைத்து சென்றனர். அவர் வீட்டு முன்பாகவரை ஜீப்பில் சென்றோம் என்றால் சுமோவில் சென்றோம். ஜீப் வீட்டு வாசலில் நின்றது நான் ஜீப்பில் இருந்தேன் என்றால் நான்இறங்கி வாசலில் நின்றேன். கோபிக்கண்ணனின் வீட்டு வாசல் எந்த திசை நோக்கி இருந்தது என்றால் தெரியாது. அந்த வீட்டில் எந்த கலர் பெயின்ட் அடிக்கப்பட்டிருந்தது என்றால் தெரியாது. 09ம் தேதி காவல் நிலையத்திற்கு நான் சென்றபோது எதிரிகளை பார்த்தேன் என்றால் வாகனத்தணிக்கையில்தான் பார்த்தேன். ஒப்புதல் வாக்குமூலம், அத்தாட்சியும் காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் கையெழுத்தை என் பேனாவில்செய்தேனா, போலீசாரிடம் வாங்கி செய்தேனா என்றால் போலீசாரிடம் வாங்கி செய்தேன். நான் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து செய்யும்பொழுது ஆய்வாளர், சார்பு ஆய்வாளர் காவல் நிலையதில் இருந்தர்களா என்றால் இருந்தார்கள். நான் போலீசார் சொல்லிக்கொடுத்தபடியும், சுந்தரி என்பவருக்கு ஆதரவாக இவர்கள்மீது வண்மம்கொண்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் எதிரிகள் ஒப்படைத்த தங்க கட்டிகள் எந்த நகையிலிருந்து உருக்கியது என்று எனக்கு தெரியாது என்றால் தெரியாது, கட்டியை ஒப்படைத்தது மட்டும்தான் தெரியும் என்றால் சரிதான்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 165 /2021

Deposition of witness for: PW - 4

| | | | |
|---|---|---|---|
| Name | : Raja | Father/Husband Name | : Subramanian |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 02.12.21 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the day of 2021.

முதல் விசாரணை:

நான் ஒத்தக்கடை நரசிங்கத்தில் வசிக்கிறேன். நான் ஆட்டோ மற்றும் வேன் ஓட்டுநராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 09.08.21ம் தேதி காலை 11.00 முதல் 11 மணியளவில் ஒத்தக்கடையிலிருந்து திருமோமூர் செல்லும் வழியில் காளிகாப்பான் என்ற இடத்தில் நானும் என் சித்தப்பா மகனும் சென்றுகொண்டிருந்தபோது வாகன சோதனையிலிருந்த போலீசார் முதல் 2 எதிரிகளையும் பிடித்து வைத்திருந்தார்கள். இருசக்கர வாகனத்தில் சென்ற எங்களயையும் நிறுத்தி வாகன சோதனை செய்தார்கள். போலீசார் எங்களிடம் மேற்படி எதிரிகள் இருவரும் திருட்டு வழக்கில் சம்மந்தப்பட்டிருப்பதாக தெரியவருவதாகவும், எங்களை சாட்சிகளாக அழைத்ததன்பேரில் எதிரிகள் மற்றும் போலீசாருடன் மீனாட்சி நகரிலுள்ள எதிரிகளின் வீட்டிற்கு சென்றோம். அங்கு எதிரிகள் அவர்களது வீட்லிருந்து 3 தங்க கட்டிகளை எடுத்து வந்தார்கள். பின்னர் காவல் நிலையம் சென்று போலீசார் தங்க கட்டிகளை எடை பார்த்து இரண்டரை, நான்கு மற்றும் பதினான்கு எடை இருந்ததாக கூறினார்கள். பிறகு மேலும் 3-வது எதிரி வீடான ஜெய்ஹிந்த்புரத்திற்கு அழைத்துச்சென்றார்கள். அங்கு அவரது வீட்டிலிருந்த 5 பவுன் எடையுள்ள மாலை போன்ற ஒரு கவர்னர்மாலையை எடுத்து வந்தார்கள். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சி, ஒப்புதல் வாக்கு மூலங்களில் உள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

காளிகாப்பான் விலக்கில் இருந்து எதிரிகளை போலீசார் என்ன சொல்லி அழைத்துச்சென்றார்கள் என்றால் ஏற்கனவே திருட்டு வழக்கில் ஈடுபட்டவர்கள் என்று சொல்லி அழைத்துச்சென்றார்கள். 1, 2 எதிரிகள்

காவல் நிலையத்தில் தங்க கட்டிகளை ஒப்படைத்தது மட்டும்தான் எனக்கு தெரியும், அது எங்கிருந்து எப்படி வந்தது தெரியாது என்றால் சரிதான். ஜெய்ஹிந்புரதத்தில் 3-வது எதிரியின் வீடு எங்கிருக்கிறது என்று தெரியுமா என்றால் நான் மெயின் ரோட்டில் நின்றுகொண்டிருந்தேன் வாகனத்தில் அழைதிது கொண்டு சென்றார்கள் அதனால் தெரியாது. 3-வது எதிரி தங்க மாலையை ஒப்படைத்தது மட்டும்தான் தெரியும் அது எங்கிருந்து எப்படி வந்தது என்று விளக்கம் தெரியாது என்றால் சரிதான். காவல் நிலையத்தில் போலீசார் கொடுத்த பேப்பரில் நான் கையெழுத்து செய்தேன் என்றால் நான் படித்து பார்த்து செய்தேன். பொதுவாக ஆட்டோ வேன் டிரைவர்களுக்கு போலீசாரின் ஒத்தாசை தேவை என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தின் விவரம் எனக்கு தெரியாது என்றால் எதிரிகள் உள்ளே இருந்து கொடுத்துக்கொண்டிருந்தாகள் நான் வெளியே இருந்தேன் அதனால் எனக்கு தெரியாது. போலீசார்தயவு தேவை என்பதால் நான் பொய்யாக யசாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.4ம் நானும் உறவினர்கள் என்றால் சரிதான். விக்னேஷ் எனக்கு உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஜெய்ஹிந்த்புரம் போனபோது நானும் விக்னேசும் மெயின்ரோட்டில் நின்றுகொண்டிருந்தோம் என்றால் சரிதான். நான் எந்த ஸ்டாண்டில் ஆட்டோ ஓட்டுகிறேன் என்றால் வீட்டில் வைத்து ஓட்டுகிறேன். பொதுவாக ஸ்டாண்டில் உறுப்பினராக இல்லாமல் ஆட்டோ ஓட்டினால் எதிர்ப்பு இருக்கும் என்றால் வீட்டிற்கு சென்று பயணிகளை ஏற்றிக்கொள்வதால் எதிர்ப்பு இல்லை. வேன் ஆட்டோ ஆகியவை சொந்த வாகனமா என்றால் வாடகைக்கு எடுத்து ஓட்டுகிறேன். ஒத்தக்கடைக்குள்தான் நான் மேற்படி வாகனங்களை ஓட்டுகிறேன் என்றால் சரிதான். நான் ஸ்டாண்டில் உறுப்பினராக இல்லாமல் வாகனம் ஓட்டுவதால் எனக்கு காவல்துறையினரின் தயவு தேவை என்றால் தேவையில்லை. ஏற்கனவே போலீசாருக்கு ஆதரவாக பல வழக்குகளில் சாட்சியமளித்துள்ளேன் என்றால் இல்லை. ஆஜர் 3 எதிரிகளையும் நான் 7ம் தேதி பார்த்தேனா அல்லது 8ம் தேதி பார்த்தேனா என்றால் 08, சாட்சி மீண்டும் 09.08.21 என்று சொல்கிறார். எதிரிகள் 3 நாட்கள் காவல் நிலையத்தில் இருந்திருப்பார்களா என்றால் நான் ஒருநாள்தான் பார்த்தேன். காவல் நிலையத்தில் எத்தனை மணிக்கு பார்த்தேன் என்றால் 2 பேரை காலை 11 மணிக்கு பார்த்தேன். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் இல்லை, உண்மையைதான் சொல்கிறேன்.